8th November 1966]

(உ) எத்தனை உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கிறது ?

(ஏ) 1965-ம் வருடத்தைவிட கடந்த ஆறு மாத காலத்தில் கூடுதல் தீ விபத்துக்களுக்கும், பொருள் நஷ்டத்திற்கும் காரணமென்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The total number of fire accidents which occurred during the period from 1st January 1966 upto 30th June 1966 was 46.

(*b*) The estimated damage to property on account of these accidents is Rs. 32,37,695.

(*c*) (i) Loss of human life—31.
(ii) Loss of cattle—24.

(*d*) The number of fire accidents from 1st January 1965 to 30th June 1965 was 74 and the estimated damage to property was Rs. 36,06,550 while for the corresponding period during this year, the number of accidents was only 46 and the estimated damage to property *was* Rs. 32,37,695. Thus, there was a decrease both in the number of fire accidents and the amount of damage during first half of the year compared to the corresponding period in 1965.

திரு. எம். எஸ். செல்வராஜன் : நான் கொடுத்திருக்கக்கூடிய தேதிக்கு முன்பு வந்துள்ள செய்திகளைப் பார்த்தால், இப்போது எங்கு ஃபயர் ஆக்ஸிடன்ட்ஸ் ஏற்பட்டாலும்கூட உயிர்சேதமும் சேர்ந்தே வருகிறது என்ற நிலை சர்க்காரின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அதுபற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறதா ? இவ்வித நிலைக்குக் காரணமாக இருப்பது குறைந்தபட்சம் ஒவ்வொரு தாலூகாவிலும் ஏதாவது ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஃபயர் என்ஜின் இல்லாதததுதான் இப்படிப்பட்ட கஷ்டம் பாவி வருவதற்குக் காரணமாக இருக்கிறது என்பதை யோசித்து அதை நிவர்த்தி செய்ய யோசிப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : பலயிடங்களிலும் ஃபயர் என்ஜின்ஸ் வைக்கவேண்டியதுதான். ஆனால், அவை இல்லாத காரணத்தினால்தான் இந்த சேதங்கள் எல்லாம் வந்துவிட்டன என்று சொல்வதற்கில்லை.

Sea erosion

***519 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—**

(*a*) whether a sudden sea erosion resulting in the submersion of land was reported near the Colachal Harbour area; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) There was no coastal erosion except inundations in certain area due to heavy waves; the sea water that entered into A.V.M. Canal was discharged at the river mouths through Pamboor Canal.

[8th November 1966

திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்தக் கடல் அரிப்பு ஒரு குறிப்பிட்ட காலத்தில் ராஜ்யம் முழுமையிலும் பல பகுதிகளில் ஏற்படுகிறது. குளச்சல் துறைமுகப் பகுதியில் மட்டுமல்ல, உவரி, பணப்பாடு என்று சென்னை வரையிலும் இருக்கிறது. இதை நிரந்தரமாக நிவர்த்தி செய்வதற்கு என்று வெளிநாடுகளில் என்னென்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள் என்று ஆலோசனை செய்து நிரந்தரமாக இதை நிவர்த்திப்பதற்கும், அது வந்த பிற்பாடு அதை நிரந்தரமாகத் தடுப்பதற்கும் அரசாங்கம் யோசித்திருக்கிறதா? அதற்குரிய வேலைகள் எந்தளவிற்கு முன்னேறியிருக்கிறது?

கனம் திரு. வெ. ராமைய்யா : இது தொடர்ந்து அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது. இது நம் ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் ஒரு பெரிய அபாயகரமான கட்டத்திற்குப்போய் பெரிய நிபுணர்கள் வந்து பார்க்கவேண்டிய அவசியமில்லை. எனக்கு ஞாபகம் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கேரளா வெஸ்ட் கோஸ்டை வந்து பார்த்துப்போன நிபுணரைப் பார்த்து இங்கும் கவனம் காட்டும்படிச் செய்திருக்கிறோம். அவர்களும் பல ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள்.

* 520 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :**
திரு. கரு. சீமைச்சாமி : } கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், மேலமணக்குடி கிராமத்தில் கடல் அரிப்பு ஏற்பட்டு, அதனால் வீடுகள் பாதிக்கப்பட்டனவா?

(இ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes. Twenty-three huts were destroyed.

(b) Relief to the affected families at Rs. 30 each was given for rebuilding the huts and at Rs. 10 each for purchase of clothes, in addition to free supply of food materials. An estimate for constructing a protective wall of 150 meter length in continuation of an existing retaining wall is under examination.

திரு. எம். எஸ். மணி : இந்த பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ரூ. 30 கொடுப்பது என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அது எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது? எவ்வளவு பாதகம் ஏற்பட்டாலும் 30 ரூபாய்தானா?

கனம் திரு. வெ. ராமைய்யா : பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு உடனடி உதவி கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் இந்த முப்பது ரூபாயும், துணிகள் போய்விட்டால் அதை வாங்குவதற்கு பத்து ரூபாயும் கொடுக்கிறார்கள். இது உடனடியாக கொடுக்கக் கூடிய உதவி. பெரிய பாதிப்பு ஏற்படும்போது மற்றவர்கள் பலரும் முன் வந்து உதவிகள் கொடுக்கிறார்கள்.